காணொலிக் காட்சி வாயிலாக

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நாளை (05 .08.2023 - சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும். அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழின தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை -600 018
நாள்- 3.8.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2023) வட அமெரிக்க ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை தயாரித்துள்ள, ஈரோடு தமிழன்பன் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த "மகாகவி" என்ற ஆவணப் படத்தை வெளியிட்டார். உடன் கவிஞர் ஈரோடு தமிழன்பன், ஆவணப்பட இயக்குநர் அமீர்அப்பாஸ், தி.அமிர்தகணேசன், கவிஞர் கவிமுகில், தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர் சங்கத் தலைவர் கவிஞர் தமிழமுதன், விழிகள் பதிப்பகம் தி. நடராசன் ஆகியோர் உள்ளனர்.



சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023 போட்டியின் முதல் போட்டியாக கொரியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே நேற்று (3.8.2023) நடைபெற்ற போட்டியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம் மற்றும் ஹாக்கி இந்தியா நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத் தொடர் தொடங்கி

# 11 நாட்களாகியும் நாடாளுமன்றத்திற்கு வர அஞ்சுகிறார் பிரதமர் மோடி!

## மணிப்பூர் விவகாரத்தில் பதிலளிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 4-

நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்கி, 11 நாட்களாகியும் பிரதமர் மோடி நாடாளுமன்றத்திற்கு வரவில்லை. மணிப்பூர் விவகாரத்தில் பதிலளிக்க பிரதமர் அஞ்சுவது ஏன் என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 20ஆம் தேதி தொடங்கியது. வருகின்ற 11ஆம் தேதி வரை கூட்டத்தொடர் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத் தொடர் தொடங்கியது முதலே மணிப்பூர் கலவரம் குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பதிலளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

கூட்டத்தொடர் தொடங்கிய முதல் நாளில், நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் மோடி, மணிப்பூர் கலவரம் குறித்து சுமார் 80 நாட்களுக்குப் பின் தனது மவுனத்தை கலைத்தார். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது என்று பிரதமர் தெரிவித்தார். நாடாளுமன்ற வளாகத்தில் முதல் நாளில் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, அதன்பின்னர் நாடாளுமன்ற அவைக்கு வரவேயில்லை. முக்கியமான கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், பல்வேறு மாநிலங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார் பிரதமர் மோடி அங்கு தேர்தல் பிரச்சாரங்களில் கலந்து கொண்டு பேசினார். ஆனால், நாடாளுமன்றத்தில் மட்டும் பேச தயங்குகிறார்.

மணிப்பூர் கொடூரம் குறித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தினமும் குரல் எழுப்பி வரும் நிலையில், இதுவரை விவாதம் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை. எதிர்க்கட்சிகள் வழங்கியுள்ள ஒத்திவைப்பு தீர்மான நோட்டீசை விவாதத்துக்கு எடுத்தால் அரசு பதிலளிக்க வேண்டும் என்பது விதிமுறை. அதன் காரணமாக ஒத்திவைப்பு தீர்மான நோட்டீசை விவாதத்துக்கு எடுக்க சபாநாயகர் மறுத்து வருகிறார். மாநிலங்களவையிலும் இதே நிலைமை தான் தொடர்கிறது.

தினமும் 60க்கு மேற்பட்ட ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுக்கப்பட்டாலும் விவாதம் மறுக்கப்படுகிறது. அதே நேரத்தில் பதிலளிக்க கட்டாயம் இல்லாத குறுகிய கால விவாதத்தில் வேண்டுமானால் விவாதிக்கலாம் என்று ஒன்றிய அரசு கூறிவருகிறது. இதற்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஒன்றிய அரசு தரப்பில் பதிலளிக்காத விவாதம் எதற்கு? மணிப்பூர் கலவரம் உலகையே உலுக்கி உள்ள நிலையில், 3 மாதங்களாக அமைதி திரும்பவில்லை. எனவே பிரதமர் அவைக்கு வந்து பதிலளிக்க வேண்டும் என்பது அனைத்து எதிர்க்கட்சிகளின் கோரிக்கையாக உள்ளது. நாடாளுமன்றத்தை கண்டு பிரதமர் அஞ்சி ஓடுகிறாரா என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

கிராமப்புறங்களிலும் தமிழ்நாடு அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கும் வகையில்

# சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைச்சர் எஸ். ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, ஆக.4-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், ராங்கியத்தில், புதிய வழித்தட பேருந்து சேவையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி (01.08.2023) அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.



அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களிலும் தமிழக அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி ராங்கியம் பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைக்கிணங்க புதிய வழித்தட பேருந்து சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய வழித்தட பேருந்து சேவையானது, காலை 7.55 மணியளவில் புதுக்கோட்டையிலிருந்து நச்சாந்துப்பட்டி, குழிபிறை, ராங்கியம் மெட்டு வழியாக ராங்கியம் அரசமரம் வரையிலும் மற்றும் காலை 09.10 மணியளவில் ராங்கியம் அரசமரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து ராங்கியம் மெட்டு, குழிபிறை, நச்சாந்துப்பட்டி வழியாக புதுக்கோட்டை வரையிலும் சென்று வரும். இதன்மூலம் இப்பகுதியில் உள்ள பொது மக்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் உரிய நேரத்திற்கு சென்றுவர முடியும்.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இது போன்ற மக்கள் நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், துணை மேலாளர் (வணிகம்) சுப்பு, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், ஊராட்சிமன்றத் தலைவர் சாந்தி பொன்னையா, வட்டாட்சியர் புவியரசன், கிளை மேலாளர் (நகர்) பழனிவேல், தொழிலாளர் முன்னேற்ற சங்கம் கிளை செயலாளர் அசோகன், தொழி லாளர் முன்னேற்ற சங்கத் தலைவர் சேகர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# இஸ்ரோ விஞ்ஞானிக்கு சிங்கப்பூர் தூதர் பாராட்டு!

புதுடெல்லி: ஆக. 4-

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் சிங்கப்பூரின் 7 செயற்கைக்கோள்கள் நேற்று முன்தினம் விண்ணில் செலுத்தப்பட்டன. இந்த செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக புவி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டன.

இதுகுறித்து இந்தியாவுக்கான சிங்கப்பூர் தூதர் சைமன் வாங் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது. சிங்கப்பூரின் 7 செயற்கைக்கோள்களை இஸ்ரோ வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தி இருக்கிறது. இந்த சாதனையை படைத்த இஸ்ரோ விஞ்ஞானிகளை பாராட்டுகிறேன். விண்வெளி துறையில் இந்தியாவும் சிங்கப்பூரும் இணைந்து செயல்படும்.

# ஜனநாயக யுகத்தில் 'இந்தியா' கூட்டணியைப் பலப்படுத்துவோம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

சென்னை, ஆக. 4 -

"பட முடியாதினி துயரம்; பட்டதெல்லாம் போதும்" என்று மக்கள் ஓலமிடும் நிலையை மாற்றுவோம்! ஜனநாயக யுத்தத்தில் "இந்தியா" கூட்டணியைப் பலப்படுத்துவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு: -

பிரதமர் மோடி தலைமையில் கடந்த 9 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் ஆர்.எஸ்.எஸ். அரசு பதவிக்கு வரும்போது (2014 ஆம் ஆண்டு தனது தேர்தல் அறிக்கையிலும், தேர்தல் பிரச்சாரங்களிலும் "வெளிப்படைத்தன்மை (Transparency in Administration) என்பது எங்கள் அரசுக்குரிய தனித்தன்மையாக இருக்கும்; குறைந்த ஆட்சி நிறைந்த ஆளுமை (Minimum Government with Maximum Governance)" என்றெல்லாம் மேடை தவறாமல் வாய் கிழியப் பேசினார்கள் அப்பாவி மக்களை நம்ப வைத்தார்கள்.

வளர்ச்சி, இளைஞர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புகள், விலைவாசியைக் கட்டுப்படுத்தல், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்குதல் என்பது போன்று பல வாக்குறுதிகளைக் கூறினர்.

### என்.டி.ஏ.கூட்டணிக் கட்சிகளுக்கே அதிர்ச்சி!

இரண்டாவது முறை 'புல்டோசர்' மெஜாரிட்டியைப் பெற்றவுடன், அரசமைப்புச் சட்டத்தையும், ஜனநாயகத்தையும் அந்தப் 'புல்டோசர்' மெஜாரிட்டி, பண பல, புஜ பல, பராக்கிரமம், ஊடகப் பிரச்சாரம் (Money Power, Muscle Power, Media Power) எல்லாவற்றின் துணை கொண்டு, நாட்டை விட்டே விரட்டிடும் பணியை வேகமாகச் செய்து வருகின்றனர்!

நாட்டில் சட்டம் ஒழுங்கு அறவே காணாமற்போன நிலையால் என்.டி.ஏ. என்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கட்சிகளுக்கே அதிர்ச்சி ஏற்பட்டு, அக்கூட்டணியிலிருந்தும் சில கட்சிகள் வெளியேறும் நிலை வேகமாகி வருகிறது!

### மணிப்பூரின் மோசமான நிலை

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு எப்படி உள்ளது என்பதற்கு வடகிழக்கு மணிப்பூரில் கடந்த 3 மாதங்களுக்குமேல் நடந்துவரும் உயிர்ச்சேதங்கள், கலவரங்கள், தீ வைத்தல்கள், பாலியல் வன்கொடுமை, மகளிரை நிர்வாணப்படுத்தியமை முதலியன அன்றாட அவலங்களாக நடைபெற்று நாம் நாகரிகம் படைத்த ஒரு மனித சமூகத்தில்தான் வாழுகிறோமா என்ற கேள்வியைக் கேட்கவே தூண்டுகின்றன!

நிலைமை இந்த அளவுக்கு மோசமாக இருப்பதால்தான், உச்சநீதிமன்றம் தாமாகவே முன்வந்து இந்த வழக்கைத் தொடுத்து, மணிப்பூர்பற்றிய விசாரணையின்போது கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்தெடுத்ததோடு, "அம் மாநில காவல்துறை தலைமை இயக்குநர் நேரில் வந்து ஆஜராகவேண்டும் மணிப்பூரில் முற்றிலும் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது (Complete Breakdown of Constitutional Machinery)" என்று பிரகடனப்படுத்திடும் நிலை ஏற்பட்டு விட்டது!

நாட்டின் பிரதமர், இன்னும் அங்கே செல்லவில்லை; ஆறுதல் கூறி அம்மக்களின் வழியும் ரத்தக் கண்ணீரைத் துடைக்க எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளாமல், "லோக சஞ்சாரம்" நடத்தி வருகிறார்; மக்களவையிலோ பிரதமரைக் காணாமல் தவித்து, கடைசியில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரும் அளவிற்குச் சென்றுள்ளனர் எதிர்க்கட்சிகள். முடிவு எப்படி என்பது தெரியும்; ஆனால், அப்படியாவது நாடாளுமன்றத்தில் ஒரு விவாதக் களமாட முடியும் என்பதால்தான் அந்த உத்தியை எதிர்க்கட்சியினர் கையாளுகிறார்கள்!

### அரியானா இன்னொரு "மணிப்பூரா?'

இந்த நிலையில், டில்லி தலைநகர் அருகே உள்ள, அரியானா மாநிலமும், மற்றொரு மணிப்பூர் ஆகிவிடுமோ என்னும் அளவுக்கு மதக் கலவரங்களின் வெறித்தனம் அங்கேயும் உருவாகியிருப்பது அனைத்து மனிதாபிமான முற்போக்காளர்கள், உண்மை ஜனநாயக விரும்பிகளின் வேதனையாக உள்ளது! அதுபற்றியும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறது.

பற்றி எரியும் தீயை எப்படி அணைத்து மக்களைக் காப்பாற்றவது என்பதுதான் முக்கிய சிந்தனையாக இருக்கவேண்டும். ஆனால், எதிர்க்கட்சிகளின் குரலை எப்படி அடக்கலாம் என்றுதான் ஆளும் ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர்;

### ஜும்லா பேர்வழிகளைத் தடுப்போம்!

நாடு எவ்வளவு கீழிறக்கத்திற்குச் சென்று கொண்டுள்ளது என்பதை எண்ணும் போது, வேதனைதான் மிஞ்சுகிறது! இதற்கு ஒரே விடை விடியல்! மீண்டும் 'இந்த ஜும்லா' வாக்குறுதிப் பேர்வழிகளை ஆட்சிக்கு வரவிடாமல் தடுப்பது எதிர்க்கட்சிகளுக்காக அல்ல; ஜனநாயகக் காப்பு சக்திக்காகவே என்று மக்களுக்கு உணர்த்திட வேண்டும். பெரும் பகுதி மக்கள் "பட முடியாதினி துயரம்; பட்டதெல்லாம்போதும்" என்று ஓலமிடும் நிலைமை நாளுக்கு நாள் மங்குவதற்குப் பதிலாக, பெருகி வருகிறது!

எனவே தலைவர்களே, மக்கள் தயாராகிவிட்ட நிலையில், தென்னாட்டை குறிப்பாக தமிழ்நாட்டு 'திராவிட மாடல்' ஆட்சியையும், அதன் ஆற்றல்மிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசியல் அணுகுமுறையையும் கூர்ந்து கவனித்து, உங்களது தன்முனைப்பைச் சற்று தள்ளி வைத்து, நாட்டுநலம்பற்றி மட்டுமே குறி என்ற பெருநோக்கோடு ஓரணியில் திரண்டு, தேர்தல் போரணியாகி, இந்த ஜனநாயக மீட்பு யுத்தத்தில் 'இந்தியா' 'INDIA' (Indian National Developmental Inclusive Alliance) கூட்டணியைப் பலப்படுத்தி, புதியதோர் அரசியல் திருப்பத்தை உருவாக்குங்கள்!

உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியதை நாடு தழுவிய பிரச்சாரப் பெருமழையாக மக்களுக்கு உணர்த்தி, "ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர்" பற்றி அம்பலப்படுத்த ஆயத்தமாகுங்கள்!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (03.08.2023) 13வது தேசிய உறுப்பு கொடை தினத்தில் புதுடெல்லியில் ஒன்றிய அரசு சுகாதாரத் துறை அமைச்சர் மரு.மான்சுக் மாண்டவியா அவர்களிடம் இருந்து தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று சிகிச்சை நிறுவனத்தால் உறுப்பு மாற்று சிகிச்சையில் சிறந்த செயல்பாட்டிற்கான இந்திய அளவில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற விருதினை பெற்றார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மாநில உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் மரு. கோபாலகிருஷ்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கனடா நாட்டிற்கு அரசு முறை பயணமாக வருகை தந்துள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் 02.08.2023 அன்று, கனடா நாட்டின் நோவாஸ் காசியா மாகாணத்தில் உள்ள ஆலீபாக்ஸ் நகரத்தில் பப்ளிக் கார்டனில் அமைக்கப்பட்டுள்ள பூங்காக்கள் மற்றும் தோட்டக்கலை சம்பந்தமான வடிவமைப்புகளை பார்வையிட்டார். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, ஆகியோர் உடனிருந்தனர்.